# PGP Educational Institutions
# NEWS updates
# Convocation function

## Dinamani

## நாமக்கல் பிஜிபி கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா



மாணவிக்கு பட்டம் வழங்கிய இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் ஆர்.விஸ்வநாதன்.

**பரமத்தி வேலூர், ஜூன் 28:** நாமக்கல் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா பரமத்தியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் சுமார் 1,100 பட்டதாரி மாணவ, மாணவிகள் பட்டம் பெற்றனர்.

விழாவிற்கு பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி ஜி. பெரியசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் விசாலாட்சி பெரியசாமி முன்னிலை வகித்தார். தாளாளர் கணபதி வரவேற்று, கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் சாதனைகள் குறித்து பேசினார்.

இதில் சிறப்பு விருந்தினராக நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதன்மையர் கே.முருகலட்சுமி கலந்துகொண்டு பட்டம், விருதுகளை வழங்கி பேசினார். அவர் பேசுகையில், கடின உழைப்பு, நேர்மை, கருணை, விடா முயற்சி ஆகியவை வெற்றியின் அடித்தளங்கள். சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படும் தலைசிறந்த நிபுணர்களாக மாணவர்கள் உருவாக வேண்டும் என்றார்.

இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் ஆர். விஸ்வநாதன் கலந்துகொண்டு, பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தி பேசுகையில், மாணவர்கள் தங்களது அறிவையும், திறமைகளையும் சமூக முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்றார்.

விழாவில் பி.ஜி.பி. கலை, அறிவியல் கல்லூரியில் கார்த்திகேயன் சென்னிமலை நினைவு விருது பெயரில் இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், டாக்டர் பழனி ஜி.பெரியசாமி விருது மற்றும் இரண்டு தங்கப் பதக்கங்களும், திருமதி விசாலாட்சி பெரியசாமி விருது ஆகியவை கல்வி மற்றும் ஒட்டுமொத்த திறன்களில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. முடிவில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் முதன்மையர் பெரியசாமி நன்றி கூறினார்.

இவ்விழாவில் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகள், முதல்வர்கள், பேராசிரியர்கள், பெற்றோர் கலந்துகொண்டனர்.

# Kalaikathir

## நாமக்கல் பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களில் 1,100 பட்டதாரிகளுக்கு பட்டம் வழங்கல்

**நாமக்கல், ஜூன் 29**

நாமக்கல் பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா நடந்தது. இதில், 1,100 பட்டதாரிகள் பட்டம் பெற்றனர். பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் தலைவர் பெரியசாமி தலைமை வகித்தார். துணை தலைவர் விசாலாட்சி பெரியசாமி முன்னிலை வகித்தார். தாளாளர் கணபதி வரவேற்றார். முக்கிய விருந்தினராக பங்கேற்ற, நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை டீன் டாக்டர் முருகலட்சுமி, பட்டங்களையும், விருதுகளையும் வழங்கி பாராட்டினார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குனர் விஸ்வநாதன், பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தி, ஊக்கமளித்து பேசினார்.

இதில், பி.ஜி.பி., கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 'கார்த்திகேயன் சென்னிமலை நினைவு விருது' பெயரில், இரண்டு தங்க பதக்கம், 'டாக்டர் பழனி ஜி.பெரியசாமி விருது' மற்றும் 'திருமதி விசாலாட்சி பெரியசாமி விருது' ஆகியவை, கல்வி மற்றும் ஒட்டுமொத்த திறன்களில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், பி.ஜி.பி., வேளாண்மை கல்லூரியில், கல்வியில் சிறந்த சாதனை படைத்த மாணவர்களுக்கு, 'டாக்டர் பழனி ஜி.பெரியசாமி விருது' பெயரில், இரண்டு தங்க பதக்கங்கள் வழங்கப்பட்டன. பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர் பெரியசாமி நன்றியுரை வழங்கினார்.




நாமக்கல் பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட நாமக்கல் மருத்துவ கல்லூரி டீன் முருகலட்சுமி, மாணவ, மாணவியருக்கு பட்டம் வழங்கினார். அருகில் தாளாளர் கணபதி.

# Dhinathandhi

பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




பரமத்தி அருகே

## பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா

பரமத்திவேலூர், ஜூன்.29-

நாமக்கல் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா பரமத்தியில் உள்ள பி.வி.டி.எல்.ஓ.ஏ. மஹாலில் நடைபெற்றது. விழாவிற்கு பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் பழனி ஜி.பெரியசாமி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் விசாலாட்சி பெரியசாமி முன்னிலை வகித்தார். தாளாளர் கண்பதி வரவேற்று கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் சாதனைகளை எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் முருகலட்சுமி கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். மொத்தம் 1,100 மாணவ-மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டன. இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குனர் விஸ்வநாதன் கலந்து கொண்டு, பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்தி, தங்களது அறிவையும் திறமைகளையும் சமூக முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று ஊக்கமளித்தார். விழாவில் பி.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கார்த்திகேயன் சென்னிமலை நினைவு விருது பெயரில் 2 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், பழனி ஜி.பெரியசாமி விருது மற்றும் 2 தங்கப் பதக்கங்களும், விசாலாட்சி பெரியசாமி விருது ஆகியவை கல்வி மற்றும் ஒட்டுமொத்த திறன்களில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. முடிவில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் முதல்வர் பெரியசாமி நன்றி கூறினார்.

# Dhinakaran

இன்று (திங்கட்கிழமை) உடனடியாக நடவடிக்கை

## பிஜிபி கல்வி நிறுவனங்களின்

# பட்டமளிப்பு விழா




பரமத்திவேலூர், ஜூன் 29: நாமக்கல் பிஜிபி கல்வி நிறுவனங்களின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பிஜிபி கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் விசாலாட்சி பெரியசாமி முன்னிலை வகித்தார். தாளாளர் கணபதி வரவேற்று கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் சாதனைகளை எடுத்துரைத்தார். நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை டீன் டாக்டர் முருகலட்சுமி, பட்டமளிப்பு விழா சிறப்புரையாற்றி, பட்டங்களையும் விருதுகளையும் வழங்கி பேசினார். தொடர்ந்து இந்திய கரும்பு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் டாக்டர் விஸ்வநாதன் (ICAR) வாழ்த்தி பேசினார். விழாவில் பிஜிபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கார்த்திகேயன் சென்னிமலை நினைவு விருது பெயரில் இரண்டு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், டாக்டர் பழனி ஜி.பெரியசாமி விருது மற்றும் விசாலாட்சி பெரியசாமி விருது ஆகியவை கல்வி மற்றும் ஒட்டுமொத்த திறன்களில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பிஜிபி வேளாண்மைக் கல்லூரியில், கல்வியில் சிறந்த சாதனை படைத்த மாணவர்களுக்கு டாக்டர் பழனி ஜி. பெரியசாமி விருது என்ற பெயரில் இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. விழாவில் 1100 மாணவர்கள் பட்டம் பெற்றனர். பிஜிபி கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர் பெரியசாமி நன்றி கூறினார். ...

## எலச்சிப்பாளையத்தில்